# தாந்தாமலை முருகன் வழி நடைப் பத்து



அனுசரணை

காலம் சென்ற திருமதி. கிருபைநாயகி நடராஜா
ஞாபகார்த்தமாக கணவர்
செ.நடராஜா (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்,
சமாதான நீதவான்) பேரன் சி.நிரேஷ்

வெளியீடு
தலயாத்திரை ஒன்றியம்
கோட்டைக்கல்லாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

குன்றின் மேல் கணபதியும் தீர்த்தக் குளத்தருகே குமரனும் அமர்ந்திருந்து குவலயத்தோரைவாழ்விக்கும் தாந்தாமலை முருகனை கோட்டைக் கல்லாற்றிலிருந்து பாதயாத்திரையாய் தரிசிக்க செல்வது மூன்றாவது வருடமாகும். இவ்வருடம் பாதயாத்திரை சிறப்பாக அமைவதற்கும், கிழக்குக் குமரனான தாந்தாமலை முருகனின் புகழ் திக்கெட்டும் பரவ வேண்டுமென்ற நோக்கோடு கோட்டைக்கல்லாறு பாதயாத்திரைக் ஒன்றியத்தினரின் அயராத முயற்சியினால் தாந்தாமலைப் பதிகம் எமது கைகளில் தவழ்ந்து நாவினில் இனிக்கப்போகின்றது. இதில் கோட்டைக்கல்லாறு அம்பாரை வில்லானில் ஆரம்பமாகி வாழைக்காலைப் பிள்ளையார் வரையாக உள்ள ஆலயங்களின் கடவுளர்களைப் பற்றியும், அவை அகர வரிசைப்படியிலான பத்துக்களாகவும் அமைந்து தாந்தாமலை முருகனின் பக்திப்புகழ் சொட்டச் சொட்ட எழிய சந்தத்தில் மிகவும் அழகானவரிகள் முருகன் எனும் அழகனை அலங்கரிக்கின்றன. இப்பதிகத்தை ஆக்கிய சேனையூரான் வை.கணேசன் அவர்களுக்கும், இவற்றை அச்சுவாகனம் ஏற்றி பக்த அடியார்களின் கைகளில் தவழ்வதற்கு உதவிய கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி.கிருபை நாயகி நடராசா ஞாபகார்த்தமாக கணவர் செ. நடராசா (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், சமாதான நீதவான்) பேரன் சி. நிரேஷ் அவர்களுக்கும் இப்பதிகத்தினை வெளியிட்டுவைக்கும் தாந்தாமலைப் பாதயாத்திரை ஒன்றியத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள். அத்துடன் எங்களது முயற்சிக்கு அடியெடுத்துக் கொடுத்து வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு அருள் புரிந்த கோட்டைக்கல்லாறு அம்பாரை வில்லானுக்கு எமது தாழ்பணிந்த வணக்கத்தை செலுத்துவதோடு அவனது அருள் யாவருக்கும் கிடைக்க எமது பிரார்த்தனைகள்.

**கோட்டைக்கல்லாறு தலயாத்திரை ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கிழக்கிலங்கையினில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கே நெல்வயல்களும், பாய்ந்தோடும் சிற்றாறுகளும் அழகிய நீர் நிலைகளும் ஒருங்கே அமையப் பெற்றுள்ள படுவான்கரை என்னும் பகுதியின் அழகிய சோலைகள் நிறைந்த மலைக் குன்றினில் மேல் அமர்ந்திருந்து அனைத்து மக்களுக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தாந்தாமலை கந்தனின் தீர்த்த விழாவிற்கு வருடா வருடம் பாதயாத்திரையாக செல்லும் அடியார்களின் நலன் வேண்டி அப்பாதயாத்திரையில் தாந்தாமலை அப்பனின் புகழ்பாடி செல்வதுடன் அப்பாதையினூடாக கடந்து செல்லும் கிராமங்களில் வீற்றிருந்து அக்கிராம மக்களின் துயர் துடைத்துக் கொண்டிருக்கும் ஆலய தெய்வங்களின் புகழ்பாடி செல்வதற்கு ஏற்றாற் போல் சேனைக்குடியூர் பக்தர் விநாயகமூர்த்தி அவர்களினால் இயற்றப்பட்டு கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி.கிருபை நாயகி நடராசா ஞாபகார்த்தமாக கணவர் செ. நடராசா (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், சமாதான நீதவான்) பேரன் சி. நிரேஷ் அவர்களின் அனுசரணையுடனும் கோட்டைக்கல்லாறு புனித பாதயாத்திரை ஒன்றியத்தாரின் முயற்சியினாலும் தொகுக்கப்பட்ட பாமாலை பதிகத்தினை வெளியிட்டு வைத்தமைக்காக எமது மனமுவந்த நல்லாசிகளை தெரிவிப்பதோடு இப்பாத யாத்திரையினை மேற்கொள்ளும் பக்த கோடிகளுக்கு எல்லாம் வல்ல தாந்தாமலையப்பனின் அருள் கிடைக்கவேண்டுமென்று அப்பன் முருகனை பிரார்த்திக்கின்றேன்.

**மார்க்கண்டு நடராஜா**



**மாகாண சபை உறுப்பினர், மட்டக்களப்பு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

தாந்தாமலை மீது வீற்றிருந்து அடியார்களுக்கு பேரருட்கடாட்சத்தை வழங்குபவன் புள்ளி மயில் வாகனனான முருகப் பெருமான் அப்பெருமானை அகப்பையில் அமர்த்தி "தாந்தாமலை முருகன் வழிநடை பத்து" என்னும் பாக்களை வெளியே தந்துள்ளார் அன்பர் வைரமுத்து கணேசன் அவர்கள்

மேலும் அவர் பக்தி மலர்களைப் பாமாலையாக்கித் தெய்வங்களுக்குச் சூட்டுவதில் தனிப் பெருமை வாய்ந்தவர். முன்பும் பொன்னூஞ்சல், அகவல் வழிநடைப் பத்து, வழிநடைக் கும்மி, ஊர்வலக்கும்மி முதலான பாமாலைகளைத் தெய்வங்களுக்கு அணிவித்தவர்.

கால் நடையாய் தாந்தாமலை நோக்கிச் செல்லும் அடியார் கூட்டம் அருளோடு ஓதி திடம் கொண்டு முருகன் சந்நிதி சென்றடைய எமக்கருளிய இப்பாக்களுக்கு எனது வாழ்த்துக்களை வழங்குவதோடு இன்னும் பல பாக்களை படைத்திட எல்லாம் வல்லவனாம் இறையோன் பேரருளும், ஆசியும் அன்பர் வைரமுத்து கணேசனுக்கு கிடைக்க வேண்டுமென்றும் பிரார்த்திப்பதில் மனநிறைவு கொள்கிறேன்.



**அன்புடன்**

**பாவாணர் அக்கரைப் பாக்கியன்**

**பெரிய நீலாவணை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிக பிரசித்தி பெற்ற திருத் தலங்களில் ஒன்றான ஸ்ரீதாந்தாமலை முருகன் வேண்டு வோர்க்கு வேண்டும் வரங்களை வாரிவழங்கும் கொடைவேலன் திருத்தலத்தினை தரிசிக்கும் நோக்கோடு கோட்டைக்கல்லாறு ஸ்ரீ அம்பாரைவில் பிள்ளையார் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து கால நடையாய் வரும் பக்தர்கள் பாதைகளில் உள்ள பல ஆலயங்களை தரிசித்து தாந்தாமலை கந்தனின் திருத்தலத்தினை வந்தடைகின்றனர்.

இவ்வருடம் இப் புனித யாத்திரையில் தாந்தாமலை கந்தனுக்கு 44 பாட்டுக்களையும் 352 வரிகளையும் கொண்ட தாந்தாமலைப் பத்து என்ற பாமாலை சூட்டுவதையிட்டு பெரும் மகிழ்வடைகிறோம். இவர்களது பணி காலத்திற்கும் நிலைத்து நிற்பதோடு இது போன்ற பாமாலைகள் எமது தலத்தின் பெருமைகளை மேலும் மக்கள் மத்தியில் எழுத்து வடிவமைத்து கொண்டு சேர்க்கிறது கோட்டைக்கல்லாறு பாதயாத்திரைக் குழு இப்பதிகத்தை எளிய வசன நடையில் ஆக்கித்தந்த சேனைக்குடியிருப்பு 02ஐ சேர்ந்த வைரமுத்து கணேசன் அவர்கள் மேலும் பல புதிய படைப்புக்களை தாந்தாமலை முருகன் மீது பாடவும் அவரது பணி தொடரவும் ஸ்ரீ தாந்தாமலை நிருவாகத்தினரின் நல்லாசிகளை வழங்குகின்றோம்.

**ஸ்ரீ தாந்தாமலை முருகன் ஆலய பரிபாலன சபை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாந்தாமலை முருகன் வழி நடைப் பத்து



மட்டுமா நகரினிலே கல்வி மேதை
மகிழ்வோடு பலரை உருவாக்கி வைத்து
அட்டதிக்கும் புகழ் பெற்ற அம்பாரைவில்
ஆனைமுகா அருட்கடலே அடியேன் நானும்
திட்டமுடன் உன்பாதம் தினம் பணிந்து
திருமுருகன் தாந்தாமலைப் பதியை நாடி
கோட்டைக்கல்லாறிருந்து நடந்து வாறோம்
கோதையுமை முதல் மகனே அருள் செய்வாயே!

மாரித்தாய் தன்பாதம் நாம் பணிந்து
மனம் தனையே ஓர்நிலையாய் வைத்துக் கொண்டு
காரிகையே கால் நடையாய் நாம் நடந்து
கதிர்வேலன் வாழ் தாந்தா பதியை நாடி
ஊரினிலே உள்ள பல ஆலயங்கள்
உளமார நாம் வணங்கிச் செல்வதற்கு
காரிகையே சிவமுத்து மாரித்தாயே
கருணை கொண்டு மனமிரங்கி அருள் செய்வாயே!

மிகவுருகி அகமகிழ்ந்து நாங்கள் செல்ல
வினைகள் ஒன்றும் வாராமல் எம்மைக் காத்து
பகலிரவாய் பக்கத்து துணையாய் இருக்கும்
பராசக்தி நர்மதா தாயே எம்மேல்
சுகமாக அருட்பார்வை பார்க்க வேண்டும்
சுப்ரமணியர் தம்பாதம் காட்ட வேண்டும்
அகமகிழ்ந்து தாந்தாமலைப் பதிக்குச் செல்ல
அன்னையே மனமிரங்கி அருள் செய்வாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பாடும் தேனாட்டின் மண்ணில் நாங்கள்
மிகவிரும்பி யாத்திரையாய் நடந்து இப்போ
தேன் தமிழ்ப் பாமாலை பாடிப் பாடி
தேடியே ஒந்தாச்சிமடம் நாடி வாறோம்
வானுயர் அரசடியில் அமர்ந்திருக்கும்
வள்ளல் எங்கள் விநாயகனே கருணை கூர்ந்து
ஊனுடல் உளமெலாம் மகிழ்ச்சி பொங்க
உத்தமனே மனமிரங்கி அருள் செய்வாயே!

முன்னாளில் செய்த வினை தீருமையா
முக்தி பெற வழி எமக்கு காட்டுமையா
எந்நாளும் உன்நினைவே வளர்வதற்கு
எளியார்க்கு கருணை மனம் காட்டுமையா
அன்பொழுக அரசடியில் அமர்ந்திருக்கும்
ஆனைமுகா எம்மீது கருணை கொண்டு
இன்பமுடன் தாந்தாமலைப் பதிக்குச் செல்ல
ஈசன் மகனே மனமிரங்கி அருள் செய்வாயே!

மூத்தாக்கள் கால்நடையாய் நடந்த பாதை
முருகையா நாங்களின்று நடந்து வாறோம்
ஏதேனும் இன்னலிடர் கொடுத்திடாமல்
எங்களையும் உன்பதியில் சேருமையா
ஆதரவாய் அனைவரையும் அருகமர்த்தி
அரசடி விநாயகரே கருணை கூர்ந்து
சாதமிகு தாந்தாமலைப் பதிக்குச் செல்ல
சங்கரனார் தன்மகனே அருள் செய்வாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிடையாள் நாகம்மை குடி கொண்டுள்ள
மேன்மை கொள் எருவில் பதி தேடி வாறோம்
சொல்லிடு வாய் நல்லாசி எல்லார்க்கும்
சொந்தமாய் உங்களுடன் இருப்பேனென்று
பொல்லாத கலியுகத்தில் கண்முன் தோன்றும்
பொற்கொடியே உன்பாதம் நாம் பணிந்து
நல்ல பெரும் புற்றேறி அமரும் தாயே
நர்மதையே வரமருள வருகுவாயே!

மேளதாள வாத்தியங்கள் முழங்குதையா
மேலான வேதவொலி கேட்குதையா
பாழான ஆசையெல்லாம் பறக்குதையா
பக்தி வெள்ளம் நெஞ்சினில் பாயுதையா
நாளாந்தம் அற்புதங்கள் பல நிகழ்த்தும்
நாயகனே களுவாஞ்சிக்குடியமர்ந்த
வேழ முகங் கொண்டவனே விரும்பி எம்மேல்
வித்தகனே வரமருள வருகுவாயே!

மையழகு மேனியனின் மருகா மூத்த
கையழகுடையதொரு கற்பகத்தை
பொய்யில்லா நெஞ்சனையைத் தேடி வாறோம்
பொன்னடியில் எமக்கு இடம் கிடைக்குமென்று
ஐயகோ பட்டிருப்பு பதியமர்ந்த
ஆனைமுகா எம்மீது கருணை கொண்டு
வையகத்தில் முதல் தெய்வமாய் விளங்கும்
வள்ளலே மனமிரங்கி அருள் செய்வாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாய் அடியவர்கள் ஒன்றுகூடி
முருகையன் புகழையே பாடிப்பாடி
சித்தம் நிறை பெரிய போரதீவுப் பற்றில்
சிங்காரக் கோவில் கொண்டமர்ந்திருக்கும்
உத்தமியாள் தன்பாதம் தேடிவாறோம்
உளமிரங்கி எம்மீது கருணை காட்டும்
வித்தகியாம் பத்திர காளித்தாயே
வினை களைந்து அடியவர்க்கு அருள் செய்வாயே!

மோதகத்துள் உலகமெலாம் அடக்கமென்று
மோகனப் புன்னகையோடு அமர்ந்திருந்து
பாதயாத்திரை செய்யும் அடியார் தம்மை
பக்கதுணையாய் நின்று என்றும் காக்கும்
வேதனை விக்கினங்கள் தீர்க்கும் எங்கள்
வேழமுகா புன்னக்குளம் பதியமர்ந்த
ஆதரவாய் எங்களுக்கு கருணை காட்ட
அருட்கடலே மனமிரங்கி அருள் செய்வாயே!

மௌனமாய்த் தாந்தாமலை மீதமர்ந்து
மனம் போல அடியார்க்கு அருள் வழங்கி
கௌரவமாய் மயில் மீது அமர்ந்து கொண்டு
கன்னியர்கள் இருவரையும் பக்கம் வைத்த
திவ்வியனே உன்பாதம் நான் பணிந்து
திருவருளை வேண்டியே நடந்து வாறோம்
பௌவியமாய்த் தாந்தாமலைப் பதியமர்ந்த
பரம்பொருளே மனமிரங்கி அருள் செய்வாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண்ணில் கண்கண்ட தெய்வமாக
இருந்தெம்மை என்றென்றும் காப்பதற்கு
தும்பங்கேணி அழகு பதி கொண்டிருக்கும்
தூயவளாம் கண்ணகித்தாயே உன்னை
நம்பியே கால்நடையாய் நடந்து வாறோம்
நாயகியே எம்மீது கருணை காட்டி
அம்பிகையே அருட்கடலே மனமிரங்கி
அன்னையே வரமருள வருகுவாயே!

எக்காலும் எனை நம்பி வருவோர்க்கு
என்றென்றும் துணையாக இருப்பேனென்று
திக்கோடை பதி தேடி வந்தமர்ந்து
தினம் தோறும் அடியவரைக் காத்து நிற்கும்
விக்கினங்கள் பல தீர்த்து வினைகளையும்
விக்கினேஸ்வரனே உன்பதியை நாடிவாறோம்
அக்கறையோ டெங்களுக்கு அருள் வழங்க
அருட்கடலே மனமிரங்கி அருள் செய்வாயே!

காத்திருந்து குடியேறி வந்த மக்கள்
கவலையின்றி எப்போதும் வாழவென்று
ஊத்து வாடிப்பதியினிலே வந்தமர்ந்து
உளமுருகிப் பணிவோர்க்கு அருள் வழங்க
பூத்த புதுமலர் போல் அமர்ந்திருக்கும்
புதுமை பெறு வினாயகனே உனைப் பணிந்தோம்
காத்தமுறு தாந்தாமலை பதிக்குச் செல்ல
கணபதியே மனமிரங்கி அருள் செய்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி

எல்லோர்க்கும் ஓர் நிலையாய் வாழ்வளிக்க

வாழைக்காலை அழகுபதி அமர்ந்திருந்து

வரமருள எப்போதும் காத்திருக்கும்

பேழைவயிற்றுப் பெருமானே உனது பாதம்

பெருமையுடன் தலை தாழ்த்தி வணங்குகின்றோம்

காளையேறும் சிவன் மகனே மனமிரங்கி

கற்கண்டே வரமருள வருகுவாயே!

சிறுமையாய் நான் பட்ட பாடு கண்டாய்

சில மனிதர் இகழ்ந்து பேசும் பேச்சும் கண்டாய்

வறுமையிலும் பொறுமையாய் வாழக் கண்டாய்

வயிறாற உண்ணாத நிலையும் கண்டாய்

இறுமாந்து வெறுமனே நாம் வாழ்ந்திடாமல்

இரக்கமுடன் அருட் பார்வை என்றும் பார்த்து

நறுமலர் சூழ் தாந்தாமலைப் பதியில் வாழும்

நவரசமே உயிர் காத்து ரட்சிப்பாயே!

கரிமுகனே கற்பகப் பிள்ளையாரே

கணபதியே தாந்தாமலை மீதுறையும்

அரிமருகா அரனாரின் மகனே மூத்த

ஆயகலை நாயகனே அடியேன் நானும்

சரியான செந்தமிழால் பாவிசைக்க

சண்முகனார் சோதரனே அருகே வாவா

பரிபூரணனே தாந்தாமலைப் பதியில் வாழும்

பரம்பொருளே வரமருள வருகுவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கடுக்க கால் நடையாய் நான் நடந்து
கதிர்வேலா உன் பதியை தேடிவாரேன்
பால்வடியும் பூமுகத்து அழகா நீயும்
பரிவோடு என்மீது கருணை கொண்டு
வேலேந்தி வள்ளி தெய்வ யானையோடு
வேல்முருகா எம்முன்னே தோன்ற வேண்டும்
பால் பொங்கும் தாந்தாமலைப் பதியில் வாழும்
பரம்பொருளே வரமருள வருகுவாயே!

கிழவேசம் உன்தனக்கு பொருத்தமையா
கிருபை தர இன்னுமென்ன வருத்தமையா
இளம் காலை வெயில் கூட சுடுகுதையா
இடுப்பிருந்து காலிரண்டும் வலிக்குதையா
அழகான புள்ளி மயில் மீதமர்ந்து
ஆறுமுகா கடைக்கண்ணால் பாருமையா
பழமுதிரும் தாந்தாமலைப் பதியில் வாழும்
பழனி வேல் வரமருள வருகுவாயே!

கீழ்திசையில் கதிரவனும் போய்மறைந்தால்
கிட்டுகின்ற சந்நிதியே தங்கலையா
வாழ்நாளில் காணாத உறக்கம் கூட
வந்தாலும் உன்நினைவே வருகுதையா
பாழான நெஞ்சத்தில் நீ அமர்ந்தால்
பரம்பொருளே நிம்மதி கிடைக்குமென்று
தாழ்பணிந்தேன் தாந்தாமலைப் பதியில் வாழும்
சண்முகனே வரமருள வருகுவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையென நினைத்திட்ட சூரன் தானும்
குணம் மாறி மறுகணமே உனை வணங்கி
இழந்தேனே குழந்தையிடம் மனதை என்று
இறுமாந்து போர் புரிய வந்த போது
அழகான வேல்கொண்டு அழிந்த எங்கள்
ஆறுமுகா உன்பதியை தேடிவாரோம்
வளமான தாந்தாமலைப் பதியின் வாழ்வே
வடிவேலா வரமருள வருகுவாயே!

கூசாமல் நான்முகனை கேள்வி கேட்டு
கொடும் சிறையில் நீயுமே அடைத்து வைத்து
பாசமுடன் தந்தைக்கு ஓங்காரத்தின்
பக்குவத்தை நன்றாக எடுத்துரைத்த
ஆசையுடன் மடியமர்ந்து ஆசானான
ஆறுமுகா உன்பதியை தேடிவாரோம்
வாசமுறு தாந்தாமலைப் பதியின் வாழ்வே
வடிவேலா வரமருள வருகுவாயே!

கெஞ்சுகின்றார் பக்தரெல்லாம் மனமுருகி
கெதியிலே அருள்தருவாய் என்று எண்ணி
நெஞ்சார உன்நாமம் தினம் துதித்து
நினதடியே தஞ்சமென நம்பி வாரோம்
வஞ்சியர்கள் இருவரை அருகில் வைத்து
வலுவான புள்ளிமயில் மீதிலேறி
வஞ்சமிலா தாந்தாமலைப் பதியில் வாழும்
வடிவேலா வரமருள வருகுவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவர்க்கு கேட்ட வரம் தருவாயென்று

கேசவனார் மருகோனே நடந்து வாரோம்

காட்டிடுவாய் உன் மகிமை கந்தா வேலா

கருணைக்கடல் தன்னிலே நீந்துமென்று

காட்டிலே கிழவனாய்க் கோலுமேந்தி

கானக் குறவள்ளிதனை தேடிச்சென்ற

பாட்டிலுயர் தாந்தாமலைப் பதியில் வாழும்

பரம் பொருளே வரமருள வருகுவாயே!

கையிருக்கு சிரம்மேலே கூப்புதற்கு

காலிருக்கு உனதுபதி சுற்றுதற்கு

மெய்யிருக்கு அதனுள்ளே மனமிருக்கு

மேலான உன் நாமம் துதிப்பதற்கு

பொய்யான சில ஆசை புகுந்திடாமல்

பொறுமையுடன் எப்போதும் காப்பாயென்று

ஐயகோ தாந்தாமலைப் பதியில் வாழும்

ஆறுமுகா வரமருள வருகுவாயே!

கொடுமைகளும் கோள்குண்டணிகளும் பொய்யும்

கொடிய இக்கலி யுகத்தில் நடக்கக் கண்டு

வடு வரவே வாயாலே வார்த்தை பேசி

வாழ்நாளை வீணாகக் கழித்திடாமல்

கடுக வந்து மெய்யடியார் மனத்தினுள்ளே

கதிர்வேலா எப்போதும் அமர்ந்திருக்கும்

நடுநிலையாம் தாந்தாமலைப் பதியில் வாழும்

நாயகனே வரமருள வருகுவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிமுறை உன் நாமம் உணர்ந்த போதும்
கொஞ்சமும் நீ பார்க்கவில்லையையா
பாடினேன் உன்புகழை தினமும் நானும்
பாசமுடன் நீயதுவும் கேட்கவில்லை
தேடி வந்தும் நீ பார்க்க வில்லை என்றால்
தென்னவனே நானுன்னை விடவும் மாட்டேன்
நாடி வந்தேன் தாந்தாமலைப் பதியின் வாழ்வே
நாயகனே வரமருள வருகுவாயே!

கௌரவமாய் மலை மீது அமர்ந்த தேவா
காசினியில் பக்தர் குறை தீர்க்கும் தேவா
ஔவைக்கு அருளன்று ஈந்த தேவா
அருணகிரி வாயினிக்க கொடுத்த தேவா
செவ்வையாய் நக்கீரர் கண்முன்னாலே
சென்று அருங்காட்சி தந்த தேவ தேவா
பௌவியமாய் தாந்தாமலைப் பதியில் வாழும்
பரம்பொருளே வரமருள வருகுவாயே!

இக்கணமே நீ காட்சி தரவும் வேண்டும்
இடர் நீக்கி இன்னல் பல தீர்க்க வேண்டும்
எக்காலும் உனை மறவா மனது வேண்டும்
என்றென்றும் உன் நினைவே நினைக்க வேண்டும்
திக்கெல்லாம் உனது புகழ் பரவ வேண்டும்
திருவருளால் பக்தரெலாம் திகைக்க வேண்டும்
எக்காலும் தாந்தாமலைப் பதியில் வாழும்
எழில் வடிவே வரமருள வருகுவாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனார் நெற்றிக்கண் தனிலுதித்த
சரவணனே கார்த்திகை மைந்தா நீயும்
தங்கியுள்ள கலியுகத்தில் கண்முன் தோன்றி
தக்கபடி காத்தருளும் தெய்வம் நீயே
எங்கும் நிறைந் தெப்போதும் அருள்பாலிக்கும்
எழில் வேலா உன்பாதம் நான் பணிந்தேன்
பொங்கு புகழ் தாந்தாமலைப் பதியில் வாழும்
புண்ணியனே உயிர் காத்து ரட்சிப்பாயே!

சாற்றுகின்ற பாமாலை கேட்க வாவா
சற்று நீ மனமிரங்கி அருள வாவா
போற்றுகின்ற உன்நாமம் கேட்க வாவா
புண்ணியனே மனமிரங்கி அருகே வாவா
ஏற்றுகின்ற கற்பூரச் சுடரே வாவா
ஏங்கும் நிறை பரம்பொருளே இப்போ வாவா
போற்றும் புகழ் தாந்தாமலைப் பதியில் வாழும்
புண்ணியனே உயிர் காத்து ரட்சிப்பாயே!

சிறுபிள்ளை என்றுமே சூரன் தானும்
சீக்கிரத்தில்அழித்து விட நினைத்த போது
மறுகணமே அவனுக்கு காட்சி தந்து
மறந்துவிடு கர்வமென உணர்த்தி வைத்து
வெறுமனே நீ மடிந்து போயிடாமல்
வேலையே வணங்கி வரம் பெறுவாயென்ற
பொறுமையுடன் தாந்தாமலைப்பதியில் வாழும்
புண்ணியனே உயிர் காத்து ரட்சிப்பாயே!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சீற்றமுடன் நானிருந்த கோலம் விட்டு
சிறியவனைக் கண்டவுடன் வணங்கி விட்டேன்
ஆற்றல் விட்டு அவன் தனக்கு அடிமையானால்
அறியாமை என்னையே வந்து சேரும்
தூற்றுவார் உலகத்தார் என்று எண்ணி
துணிந்து வந்த சூரனையே பிளந்து கொன்ற
போற்றும் புகழ் தாந்தாமலைப் பதியில் வாழும்
புண்ணியனே உயிர் காத்து ரட்சிப்பாயே!

சுகமிழந்து சிறைதனிலே வெந்து நொந்த
தேவர்களை சிறை மீட்ட காரணத்தால்
அகம் மகிழ்ந்து இந்திரன் தன் மகளாம் அந்த
ஐராவதம் வளர்த்த தெய்வயானை
சுகமாக வாழ்தன்று வாழ்ந்த தேவா
சுந்தரனே உன்பாதம் நான் பணிந்தேன்
தகமையுடன் தாந்தாமலைப் பதியில் வாழும்
சக்திவேல் உயிர் காத்து ரட்சிப்பாயே!

சூரசம்காரவதை செய்த வேலா
சுற்றிவரும் பகையதனை அழித்த வேலா
நாரதர் சொற்கேட்டு மகிழ்ந்த வேலா
நங்கை வள்ளி தனை தேடிச் சென்ற வேலா
தீரமுடன் வேடனாய் வேசம் கொண்டு
திடமுடனே வனத்திலே அலைந்த வேலா
வீரமுடன் தாந்தாமலைப் பதியில் வாழும்
வீரவேல் உயிர் காத்து ரட்சிப்பாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றாயே வனம்தனிலே வேசம் மாறி
சேயிழையாள் வள்ளியவள் எங்கேயென்று
கண்டாயே தினைப்புனம் தன்னிலன்று
கருங்குழலார் அழகினிலே மயக்கமுற்று
நின்றாயே வேங்கை மரமாக நீயும்
நிச்சயமாய்க் கைப்பற்ற வேண்டுமென்று
என்றாலும் தாந்தாமலைப் பதியில் வாழும்
எழில் முருகா உயிர் காத்து ரட்சிப்பாயே!

சேவடியே எப்போதும் தஞ்சமென்று
சேர்ந்த பெரும் பக்தரெலாம் ஒன்று கூடி
காவடியை தானேந்திவருவேனென்று
கனத்தமுள்ளு முதுகினிலே பாச்சிச் கொண்டு
ஆவலுடன் உன்பதியைத் தேடி வாறார்
ஆறுமுகா உனது அருள் கிடைக்கமென்று
காவலென தாந்தாமலைப் பதியில் வாழும்
கதிர்வேலாஉயிர் காத்து ரட்சிப்பாயே!

சைவத்தின் முழுமுதலே ஞானவேலா
சக்தி வேல் பெற்ற சிவசக்தி வேலா
வையகத்தில் நீ கண்ட தெய்வம் சீலா
வாழ்வளிக்கும் சக்தியுமை பாலா வேலா
மையழகு மேனியனின் மருகா வேலா
மானீன்ற வள்ளி மணவாளா வேலா
ஐயகோ தாந்தாமலைப் பதியில் வாழும்
ஆறுமுகா உயிர் காத்து ரட்சிப்பாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பனத்தில் அடியார்கள் கண்முன்னே தோன்றி
சொல்லிடுவாய் நல்லாசி மனம் குளிர
அற்புதமாய் உன் கருணை கிடைத்ததென்று
ஆறுமுகா அப்போதே விழித்துக் கொண்டு
கற்பூரச் சட்டியேந்தி அலகு குத்தி
கால்நடையாய் உன் பதிக்கு வருவேன் பார்
பற்றோடு தாந்தாமலைப் பதியில் வாழும்
பரம்பொருளே உயிர் காத்து ரட்சிப்பாயே!

சோதி வடிவாயெங்கும் நிறைந்தாய் போற்றி
சொக்கநாதன் தன் மகனாய் வந்தாய் போற்றி
ஆதியந்தம் கடந்த அழகே போற்றி
அடியார்கள் நெஞ்சமதில் நிறைந்தாய் போற்றி
வாதிட்டு அசுரர் குலம் வென்றாய் போற்றி
வஞ்சக நெஞ்சரெல்லாம் அழித்தேநல்ல
சேதிதரும் தாந்தாமலைப் பதியில் வாழும்
தெய்வமே உயிர் காத்து ரட்சிப்பாயே!

சௌக்கியமாய் தாந்தாமலைப் பதியமர்ந்து
தஞ்சமென வந்தோர்க்கு அருள்புரிந்து
திவ்வியமாய் மயிலேறி அமர்ந்து கொண்டு
திருக்கரத்தில் வேலேந்தி நிற்கும் தேவா
எவ்வளவோ அடியார்கள் துதியைக் கேட்டு
எப்போதும் அருள்மழை பொழியும் தேவா
பௌவியமாய் தாந்தாமலைப் பதியமர்ந்து
பரம்பொருளே உயிர் காத்து ரட்சிப்பாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சையுடன் உன்பாதம் பணிந்தேனையா
இரக்கம் நீ என்மீது காட்டுமையா
பச்சை மயில் மீதேறி அமருமையா
பறந்து நீ என்னருகில் வாருமையா
அச்சமின்றி அனுதினமும் உனைப் பணிந்தேன்
ஆறுமுகா அருள்புரிய வாருமையா
கச்சிதமாய் தாந்தாமலைப் பதியமர்ந்து
கதிர்வேலா உயிர் காத்து ரட்சிப்பாயே!

ஆறுமுகன் திருநாமம் துதிப்போர் வாழ்க
அவனி தனில் தமிழர் குலம் செழித்து வாழ்க
கூறுகின்ற தமிழ்ப் பாவை கேட்போர் வாழ்க
குன்றாமல் செய்தொழில் ஓங்கி வாழ்க
ஏறுமயில் வேல்முருகன் என்றும் வாழ்க
ஏற்றமிக வள்ளி தெய்வ யானை வாழ்க
வீறுடைய தாந்தாவேல் முருகன் வாழ்க
விருப்போடு துதிப்போர்கள் வாழ்க வாழ்க!



**"ஓம் சரவணபவ"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

தாந்தாமலை முருகன் வழி நடைப்
பத்தினை எழுத்து வடிவில் தந்த
வைரமுத்து கணேசன்
(சேனைக்குடியிருப்பு -02)
அவர்களுக்கும் இப்பதிகத்திற்கான
ஆசியுரை மற்றும் வாழ்துரைகளை
வழங்கியோருக்கும் இதனை கணனி
வடிவில் வடிமைத்து அச்சிட உதவிய
அனைவருக்கும் கோட்டைக்கல்லாறு
தலயாத்திரை ஒன்றியம் சார்பாக
நன்றிகளை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தலயாத்திரை ஒன்றியத்தினர்**

**கோட்டைக்கல்லாறு**

**எமது யாத்திரையானது அம்பாரைவில் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி தாந்தாமலை முருகன் ஆலயத்தில் முடிவடையும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்வின் அச்சகம் - கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org